# திருக்கழுக்குன்றம் பேரூராட்சி
## காஞ்சிபுரம் மாவட்டம்

**ந.க.எண்.508/2010.** **நாள்.04.11.2010.**

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் 2010-2011-ம் ஆண்டு **மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை** நிதியில் கீழ்குறிப்பிட்டுள்ள விவரப்படியான பணி மேற்கொள்ள மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் https://tntenders.gov.in என்ற இணையதளத்திலும் ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு **23.11.2010-ம் செவ்வாய்கிழமை** பிற்பகல் 3.00 மணி வரை செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் பெற்றுக் கொள்ளப்படும்.

ஒப்பந்தப்புள்ளி நமூனா படிவம் கீழ்க்குறிப்பிட்டுள்ள விலையில் **22.11.2010ம் தேதி முற்பகல் 11.00 மணி வரை** அலுவலக நாட்களில் பேரூராட்சி அலுவலகத்தில் கிடைக்கும். இணையதளம் வழியாக ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புவோர் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் 22.11.2010 அன்று முற்பகல் 11.00 மணி வரை ஒப்பந்தப்புள்ளி நமூனா படிவத்தினை பெற்றுக்கொள்ளலாம். இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளி நமூனாவிற்கான தொகையினை வங்கி கேட்பு உண்டியாக செலுத்தப்படவேண்டும்.

பணிக்கான வைப்புத் தொகையினை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புவோர் 22.11.2010 அன்று மாலை 5.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் ரொக்கமாக செலுத்தப்படவேண்டும். இணையதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளி அளிக்க விரும்புவோர் வைப்புத் தொகையினை வங்கி கேட்பு உண்டியாக 2211.2010 அன்று 5.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் நேரில் செலுத்தப்படவேண்டும்.

இணையதளம் மற்றும் பேரூராட்சி அலுவலகத்தில் நேரடியாக பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முறையே இணையதளம், மூடி முத்திரையிடப்பட்ட ஒப்புந்தப்புள்ளிகள் **23.11.2010-ம் செவ்வாய்கிழமை** பிற்பகல் 3.30 மணிக்கு வருகை புரிந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த இதர நிபந்தனைகள் மற்றும் விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் கேட்டுத்தெரிந்துகொள்ளலாம்.

### விவரம்

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூ.) | வைப்புத் தொகை (ரூ) | ந.மு.னா படிவம் விலை (ரூ). | பணிமுடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | சன்னதி தெரு-அக்ரஹாரம் தெரு இடையில் உள்ள **லட்சுமி தீர்த்த குளத்தினை** சீரமைத்தல் | **10,00,000/-** | **10,000/-** | **6693/-** | 45 நாட்கள் |

### நிபந்தனைகள்

1. பேரூராட்சியில் நீண்ட காலமாக நிலுவை பணிகள் உள்ள ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. மேலும் 2010-2011ம் ஆண்டு ஒப்பந்ததாரர் பதிவினை புதுப்பித்த ஒப்பந்ததாரர்கள் மற்றும் இணையதளத்தினை பொருத்தவரை மாநில அரசின் துறைகள் மற்றும் வாரியங்கள் ஆகியவற்றில் 2010-2011ம் ஆண்டு ஒப்பந்ததாரராக பதிவு செய்துள்ளவர்கள் **(குறைந்தபட்சம் வகுப்பு 3)** மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள தகுதியானவர்கள்.
2. அரசாணை எண்.538.பொ.ப.துறை நாள்.01.10.2004-ன்படி ஒப்பந்தப்புள்ளி நமுனா விலை மதிப்பீடு ரூ.0.10 இலட்சத்திற்கு குறைவான பணிகளுக்கு ரூ.335/- , ரூ.0.10 இலட்சம் முதல் ரூ.2.00 இலட்சம் வரை ரூ.670/-, ரூ.2.00 இலட்சம் முதல் ரூ.5.00 இலட்சம் வரை ரூ.1680/-ம், ரூ.5.00 இலட்சம் முதல் ரூ.10.00 இலட்சம் வரை ரூ.3350/-, ரூ.10.00 இலட்சம் முதல் ரூ.25.00 இலட்சம் வரை ரூ.6693/-, ரூ.25.00 இலட்சம் முதல் ரூ.50.00 இலட்சம் வரை 10040/-ரூ.50.00 இலட்சத்திற்கு மேல் ரூ.16733/- என்ற விலை விகிதத்தில் வசூலிக்கப்படும்.
3. இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர்கள் ஒப்பந்தப்புள்ளி நமூனா மற்றும் பணிக்கான வைப்புத் தொகை ஆகியவற்றிற்கான கேட்பு உண்டி திருக்கழுக்குன்றம் பாரத மாநில வங்கியில் மாற்றத்தக்க வகையில் The Executive Officer, Thirukalukundram Town Panchayat என்ற முகவரிக்கு எடுத்து குறித்த காலத்தில் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிட்ட உறையில் வேலையின் பெயர் மற்றும் ஒப்பந்ததாரர் பெயர், முகவரி தெளிவாக எழுதி சமர்ப்பித்தல் வேண்டும். இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர் ஒப்பந்ததாரர் பதிவு செய்துள்ள விவரம், ஒப்பந்த முன் அனுபவங்கள் ஆகியவற்றினை இணையதளத்தில் அளிக்கப்படவேண்டும்.
5. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியாளர் நடைமுறை நூல் பகுதி VI உட்பிரிவு 6.1.2-ன்படி பணிகளுக்கான வைப்புத்தொகை 1% ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கு முன்னர் **22.11.2010**க்குள் செலுத்தப்படவேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் வெற்றி பெற்ற ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கும்போது / ஒப்பந்தம் செய்யும்போது 2% வைப்புத் தொகை செலுத்தப்படவேண்டும். இவ்வைப்புத்தொகை செலுத்தாத பட்சத்தில் பணி உத்திரவு ரத்து செய்யப்படும். பணி முடித்து பட்டியல் வழங்கும்போது மதிப்பீட்டில் 5 சதவீதம் கூடுதல் வைப்புத்தொகை பிடித்தம் செய்யப்படும். இத்தொகை கட்டுமான பணி என்ற பட்சத்தில் பராமரிப்பு காலமான 6 மாதத்திற்கு பிறகும், சாலை பணி என்ற பட்சத்தில் பராமரிப்பு காலமான 1 வருடத்திற்கு பிறகும் திரும்ப வழங்கப்படும்.
6. மேற்க்குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் வைப்புத் தொகை ரொக்கமாக செலுத்தி இரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்படவேண்டும். காலம் கடந்த பிறகு வைப்புத்தொகை பெற்றுக்கொள்ளப்படமாட்டாது. இணையதளத்தில்

ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர் பணிக்கான வைப்புத்தொகையினை மேற்குறிப்பிட்டுள்ள விவரப்படி வங்கி கேட்பு உண்டியாக பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும்.

7. ஒப்பந்தப்புள்ளியில் அடித்தல் திருத்தல் இருந்தால் அதனை சம்மந்தப்பட்டட ஒப்பந்ததாரர் கையொப்பமிட்டு உறுதி செய்தல் வேண்டும். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **23.11.2010** அன்று பிற்பகல் 3.00 மணிக்கு பிறகு ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படமாட்டாது.
8. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை நிராகரிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ செயல் அலுவலர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு.
9. பணி துவங்குவதற்கு முன்னர் ரூ.20/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் இப்பேரூராட்சியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் தேதியை தள்ளிவைக்கவோ அல்லது ரத்து செய்யவோ செயல் அலுவலர் அவர்களுக்கு அதிகாரம் உண்டு. அதனால் ஏற்படும் இழப்பிற்கு நிர்வாகம் பொறுப்பாகாது.
11. பேரூராட்சியின் மீது வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
12. தற்போதைய 2009-2010-ம் ஆண்டு வருமான வரி சான்று மற்றும் விற்பனை வரி பதிவு மற்றும் சான்று இணைக்கப்பட வேண்டும்.
13. ஒப்பந்ததாரர் இப்பேரூராட்சிக்கு செலுத்தவேண்டிய 2010-2011-ம் ஆண்டு முதலாம் அரையாண்டு சொத்து வரி, தொழில் வரி, கடைவாடகை மற்றும் இதர குத்தகை தொகை நாளது மாதம் வரை கட்டிய ரசீது இணைக்கப்படவேண்டும்.
14. ஒப்பந்ததாரரால் செய்யப்படும் பணியில் பயன்படுத்தப்படும் பொருட்களுக்கு தர நிர்ணய சான்று கோரும் பட்சத்தில் பெற்றுத் தரப்பட வேண்டும்.
15. இப்பேரூராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்வதற்காக மூன்று முறை ஒப்பந்த நமுனா பெற்று ஒப்பந்தத்தில் கலந்து கொள்ளாத ஒப்பந்ததாரர்களும் மற்றும் மூன்று முறை ஒப்பந்தப்புள்ளியிலேயே கலந்துகொள்ளாத ஒப்பந்ததாரர்களும் மறு அறிவிப்பின்றி ஒப்பந்தாரர் பதிவு ரத்துசெய்யப்படும்.
16. பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் சொத்து மதிப்பிற்கேற்ப கீழ்க்கண்டவாறு தரம் பரிசீலித்து ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படும்.

    வகுப்பு 1 ரூ. 25.00 இலட்சத்திற்கு மேல்
    வகுப்பு 2 ரூ. 25.00 இலட்சம் வரை,
    வகுப்பு 3 ரூ. 10.00 இலட்சம் வரை
    வகுப்பு 4 ரூ. 5.00 இலட்சம் வரை,
    வகுப்பு 5 ரூ. 2.00 இலட்சம் வரை.

    அரசாணை எண். 1729/பொ.ப.து. நாள். 29.12.1992.
17. பணி செய்து முடித்தவுடன் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் அவர்களால் அளவுகள் மேலளவுகள் செய்து அளவு புத்தகத்துடன் பட்டியல் தயாரித்த பின்னர் தொகை உரிய பிடித்தங்கள் போக மீதம் கோடிட்ட காசோலை மூலம் தொகை வழங்கப்படும்.
18. ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து பேரூராட்சி மன்ற முடிவே இறுதியானதாகும்.
19. பணிகளுக்கு வேலை உத்திரவு பெறப்பட்டு, எதிரே குறிப்பிட்டுள்ள காலகெடுவிற்குள் பணிகள் செய்து முடிக்கப்பட வேண்டும். தவறினால் இப்பேரூராட்சியில் விதிக்கப்படும் அபராதத்திற்கும் மற்றும் இதர செயல்பாட்டிற்கும் ஒப்பந்ததாரர் கட்டுப்படவேண்டும்.
20. ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் வேலைகள் நடைபெறும் போது இயற்கை இடர்பாடுகள் மற்றும் விபத்துக்கள் நடைபெறும் போது அதற்கான முழுப் பொறுப்பிற்கும் ஒப்பந்ததாரரே சார்ந்தவராவார். அதற்கான காப்புறுதி செய்து கொள்ள ஒப்பந்ததாரரே கடமைப்பட்டவராவார். எனவே அதற்கான சம்மதம் தெரிவிக்கப்பட வேண்டும்.
21. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் விலைவிகிதத்தை ஏற்று அவர்களுக்கு வேலைக்கான உத்திரவு வழங்கும்போது 0.3 % கட்டிட தொழிலாளர் நலநிதி தொகையை வங்கி வரைவோலையாக இப்பேரூராட்சியில் செலுத்திய பின்னரே உத்திரவு வழங்கப்படும்.

**செயல் அலுவலர்,**
**திருக்கழுக்குன்றம் பேரூராட்சி,**
**காஞ்சிபுரம் மாவட்டம்.**

பெறுநர் :-

**2010-11க்கு பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்ததாரர்கள்,**
**திருக்கழுக்குன்றம் பேரூராட்சி.**

நகல் :-

1. மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, காஞ்சிபுரம் அவர்களின் தகவலுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர், அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்), காஞ்சிபுரம் மண்டலம் அவர்களின் தகவலுக்கு.
4. இளநிலை பொறியாளர், மாமல்லபுரம் பேரூராட்சி.
5. தலைவர், துணைத்தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் திருக்கழுக்குன்றம் பேரூராட்சி.
6. அலுவலக விளம்பர பலகைக்கு.
7. கோப்புக்கு.